THE HINDU - ENGLISH
Dated: 25.03.2025

# Election officer holds all-party meeting on poll roll inclusion

The Hindu Bureau
CHENNAI

An all-party meeting was held on Monday at the Ripon Buildings under the leadership of Chennai District Election Officer and Greater Chennai Corporation (GCC) Commissioner J. Kumaragurubaran.

The meeting focused on various election-related processes such as ensuring the inclusion of names in the electoral roll, a release said

Measures for effective handling and resolving of complaints and establishment of control rooms at zonal levels were also discussed at the meeting, the release added.

The meeting was conducted as per the directives of the Election Commission of India to ensure free and fair elections.

The meeting was attended by GCC officials and representatives from all recognised political parties.

THE HINDU- ENGLISH
Dated: 25.03.2025

# Cases booked for poll-code violations still pending

The Hindu Bureau
CHENNAI

As many as 64 cases, which were booked for poll-code violations during the last Lok Sabha election, are still pending without any progress in the investigation. According to an information obtained under the Right to Information Act (RTI), a total 64 first information reports (FIR) were registered from March 16 to April 14 in 11 Assembly segments in Chennai district, which come under the Greater Chennai Police.

The number of cases registered Assembly segment-wise include 23 in Saidapet, 11 in T. Nagar, six in R.K. Nagar, five in Velachery, four each in Egmore and Mylapore, three each in Perambur and Virugambakkam.

**'No follow-ups'**

R. Karthikeyan, the RTI applicant, said that in the election cases, the police usually don't follow up the investigation as it is directly against the local politicians. "They wait until the FIR becomes time-barred which enables the accused to file quash cases in the court,"

However, a senior police officer said all those cases were booked for poll-code violation and petty issues. In case of bodily offences or any violence reported during the poll, we are not sparing and will follow all legal procedures and file charge-sheets as per law, he adds.

DECCAN CHRONICLE
Dated: 25.03.2025




An all-party consultative meeting chaired by Chief Electoral Officer Archana Patnaik held in the city on Monday. —DC

TIMES OF INDIA
Dated: 25. 03. 2025

# TN parties urge ECI to release 'purified' voters' list

TIMES NEWS NETWORK

**Chennai:** Major political parties in Tamil Nadu, which participated in a meeting organised by the Election Commission of India (ECI), urged it to release voters' lists without any discrepancies.

During the meeting, political parties expressed their concerns about the "purification" of voters' lists to ensure 100% voting, especially in urban areas, and called for stringent action against officials involved in violations during polling. The meeting of recognised political parties, headed by chief electoral officer (CEO) Archana Patnaik, was held here on Monday.


Ramesh Shankar R

**FOR FAIR MANDATE:** ECI held an all-party meeting on Monday

After the meeting, DMK organisation secretary R S Bharathi told reporters that DMK stressed all aspects required for the conduct of a free and fair election.

"We stressed the purification of electoral voters. There were several issues due to duplication of voters and missing voters' names, problems in polling booths, and disagreements among parties over missing names," he said. He urged ECI to give swift permission for advertisements. "For issuing advertisements in media and social media, political parties need to get prior permission. A committee has been appointed for the purpose, but permission is delayed by at least five days to one week. The permission for advertisements should be given within 24 hours, and only then will the purpose be served," Bharathi said.

Former AIADMK minister D Jayakumar said there were several discrepancies in the electoral roll.

"People who are dead are voting in large numbers in TN. At a time when technology has grown to such an extent, why does this problem of deleting dead voters still exist," he wondered. He urged ECI to take stringent action against erring officials.

BJP vice-president Karu Nagarajan said polling should be held on working days to increase polling. "If polling is held during holidays, people tend to go out for vacations, and hence the ECI should not conduct elections on holidays." He said there are discrepancies both in polling booths and in the voters' list. "Moreover, members of the same family have different polling booths, which should be avoided," said Nagarajan.

Representatives of other parties, including Congress, CPI and CPM, urged ECI to undertake purification of voters' lists.

THE NEW INDIAN EXPRESS
Dated: 25.03.2025

# ENSURE ERROR-FREE VOTER LIST, ECI URGED

EXPRESS NEWS SERVICE
@Chennai

OFFICE-BEARERS of political parties who attended the meeting of the recognised political parties convened by Chief Electoral Officer Archana Patnaik on Monday stressed preparing 100% error-free electoral rolls for the 2026 Assembly election well ahead of the polling date.

RS Bharathi (DMK) said permission for advertisements on social media should be given within 24 hours. As of now, it takes a week and delayed permission does not serve any purpose.

D Jayakumar (AIADMK) said the issuing of booth slips should be done perfectly. Impartial action should be taken against election officials who are involved in irregularities. Different lists of voters being given to the political parties and the presiding officers should be avoided and an identical list of voters should be given to both to avoid last-minute confusion. The list of deleted and included voters should also be given to the political parties, he said.

The CPM said that in the polling station, EVM should be placed first and next to it, the VVPAT machine should be placed to ensure transparent elections. The all-party meetings should be held once in six months instead of holding them during the election times alone.

The VCK emphasised on timely completion of voters list, at least a week before the election. The CPI said the electoral registration officer should be made responsible if the electoral rolls are to be prepared flawless.

Karu Nagarajan (BJP) said the same polling booth should be designated for all elections. The list of deleted voters and those above the age of 80 who can vote from their homes should also be given to the political parties.

The office-bearers of Aam Aadmi, DMDK, Naam Tamilar Katchi and Congress also took part in the meeting.


TN CEO Archana Patnaik chairs a meeting with representatives of political parties at the secretariat in Chennai on Monday | P JAWAHAR

D. T. NEXT
Dated: 25.03.2025

DMK moots nod for political advts granted a day before release

# AIADMK: Link Aadhaar, EPIC for error-free voter's list



Photo: Justin George

Archana Patnaik chairs meeting of political parties on Monday

**CHENNAI: The AIADMK has demanded that the Election Commission consider linking Aadhaar with the EPIC to avoid confusion in the voter list, while the DMK has demanded that prior permission for political party advertisements be provided within 24 hours.**

A suggestion to this effect was made at the meeting of the recognised national and state political parties held by the chief electoral officer Archana Patnaik on Monday.

Senior AIADMK leader D Jayakumar said that of the six crore voters in the state, four crore voters have linked their Aadhaar with the EPIC. "Even though it is not mandatory to link Aadhaar, if the voter's ID and the Aadhaar are linked it will weed out various issues including photo mismatch, deletion and removal of the deceased person's names," he said.

Despite the numerous complaints given to the commission, the issues on the voter's list were not sorted out yet, he said. "We have been suggesting to the commission to make use of the technology in removing the names of deceased persons from the voter's list by getting details from the local bodies. But no action has been taken on it," he said.

Jayakumar also alleged that there are two voters' lists circulated one for the political parties and the presiding officers of the polling booths. "The names of the voters will be in the voting list with the political parties but when they went inside the booths their names would be marked as deleted in the list with the presiding officer," he said.

DMK organising secretary RS Bharathy said that if political parties apply for advertising in TV or social media to get prior approval to the committee set up by the Election Commission, it takes five days to one week to get approval. "It is an unwanted delay. The committee should be in the CEO's office. Permission should be given in 24 hours," he told reporters.

BJP state vice president Karu Nagarajan said that voters face confusion over the polling booths as they were forced to visit different booths for different elections.

"All the elections should be held at the same booth. Voters should not be forced to visit different booths for the local body polls, assembly and parliamentary polls," he said.


He also pointed out that the election commission shares the list of the newly added voters before the release of the final voters list but the information on the deleted voters were not shared.

"We demanded the commission to share deleted voters list," he said.

THE HINDU - TAMIL
Dated: 25.03.2025


நா.மணி

பேராசிரியர்
தொடர்புக்கு: tnsfnmani@gmail.com

# மக்களவைத் தொகுதி மறுவரையறை

## ஒரு மாற்றுத் தீர்வு

மக்களவைத் தொகுதிகள் மறுவரையறை தொடர்பான விவாதம் தேசிய அளவில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. 888 இருக்கைகளுடன் நாடாளுமன்றத்தின் புதிய கட்டிடம் உருவானபோது இப்பிரச்சினை சற்று வலுவடைந்தது. தொகுதி மறுவரையறைக்கான கால அவகாசம் நெருங்கிவரும் தருணத்தில், இப்பிரச்சினை உச்சம் தொட்டுவிட்டது.

**பின்னணி**

'ஒரு குடிமகனுக்கு ஒரு வாக்கு. குடிமக்களின் எண்ணிக்கை உயர உயர அதற்கு ஏற்ப வாக்காளர் எண்ணிக்கை உயரும். இதனைப் பிரதிபலிக்கும் வகையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட வேண்டும்' என்ற அரசமைப்புச் சட்ட வழிகாட்டுதல் 1971ஆம் ஆண்டு வரை பின்பற்றப்பட்டது. கூடவே, சுதந்திரம் அடைந்த வீரியத்தோடும், பெரும் கனவுகளுக்கான தீனியாகவும், இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. மக்கள்தொகையின் வளர்ச்சியால் அவை தடைபடுவது உணரப்பட்டது. மக்கள்தொகைக் கொள்கை இதற்கெனத் தனியாக வகுக்கப்பட்டது. அப்போதைய மக்கள்தொகைப் பெருக்கம், 'மக்கள்தொகை வெடிப்பு' (Population Explosion) என்றே அழைக்கப்பட்டது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாமல் எதிர்பார்க்கும் வளர்ச்சி சாத்தியமில்லை என்ற தீர்க்கமான முடிவுக்கு அரசு வந்தது. 'சிறு குடும்பம் சீரான வாழ்வு', 'நாம் இருவர் நமக்கு இருவர்', 'வளமான எதிர்காலத்துக்குக் குடும்பக் கட்டுப்பாடு' எனப் பிரச்சார முழக்கங்கள் தொடங்கி, எண்ணற்ற வடிவங்களில் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், பிரச்சார வடிவங்கள் என முடுக்கிவிடப்பட்டன.

துரதிர்ஷ்டவசமாக இக்கொள்கை நாடு முழுவதும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நீண்ட காலமாகச் சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் நடந்துவந்த மாநிலங்கள், கல்வி, குறிப்பாகப் பெண் கல்வியில் சிறந்து விளங்கிய மாநிலங்கள், சுகாதாரக் கொள்கைகளில் அக்கறை செலுத்திய மாநிலங்கள் மக்கள்தொகை கட்டுப்பாட்டுக் கொள்கையைச் சரியாக உள்வாங்கிக் கொண்டன. ஆனால், ஏற்கெனவே நிலவிவந்த வடக்கு – தெற்கு என்கிற அரசியலோடு அழுத்தமாக ஒத்துப் போவதாக இருந்தது.

தென்னிந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் மக்கள்தொகை வளர்ச்சி விகித வேறுபாடு மக்களவைத் தொகுதிகள் மறுவரைவுக்கு ஓர் அழுத்தமான முரண்பாட்டை உருவாக்கியது. 'மக்கள்தொகை அடிப்படையில் மறுவரையறை செய்தல்' என்பது வளர்ச்சிப் பாதையை ஏற்றுக்கொண்ட தண்டனையாகவும், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகக் கருத்தில் கொள்ளாத மாநிலங்களுக்குப் பரிசாகவும் அமைந்துவிடும். மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு மக்களவை இடங்கள் குறையும். கட்டுப்படுத்தாத மாநிலங்களுக்குக் கூடுதல் மக்களவை இடங்கள் கிடைக்கும்.

**மாற்றுச் சிந்தனைக்கான தருணம்**

எழுபதுகளிலேயே எழுந்துவிட்ட பிரச்சினை இது. அப்போதே இதற்கு நிரந்தரத் தீர்வு காணத் திட்டமிட்டிருக்க வேண்டும். ஆனால், தற்காலிகத் தீர்வுகளையே அப்போதைய ஆட்சியாளர்கள் முன்வைத்தனர். இதனால், இன்றைக்கு இப்பிரச்சினை தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களில் முக்கியமான பேசுபொருளாகியிருக்கிறது.

இந்நிலையில், மக்கள்தொகைக்கு ஏற்பத் தொகுதிகள் மறுவரையறை என்ற சிந்தனையில் இருந்து வெளிவந்து தீர்வைத் தேடுவது அவசியம்.

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி அடுத்த கட்ட ஆரோக்கியமான நகர்வுக்கு வழி வகுத்தால் என்ன? 'மக்கள்தொகை அடிப்படையில், பொத்தாம் பொதுவாக வெறும் ஆட்களின் எண்ணிக்கை அடிப்படையிலான ஜனநாயகப் பிரதிநிதித்துவம் தேவை' என்பதை மறுசிந்தனைக்கு உள்ளாக்க வேண்டிய தருணம் இது. மக்களவை உறுப்பினர்களின் பணிகள் மக்கள்தொகை அளவு சார்ந்தவை அல்ல; திட்டங்கள் / கொள்கைகள் உருவாக்கம் / செயலாக்கம் சார்ந்தவை. மக்களவை அல்லது அதன் உறுப்பினர்களின் பணிகள் மக்கள்தொகை வகைமையைப் பொறுத்தே அமைகின்றன.

சாதி, மத அடிப்படையில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், பொருளாதாரரீதியில் எத்தனை வர்க்கங்களின் கலவையாக மக்கள் திரட்சி உள்ளது என்பதெல்லாம் முக்கியமானவைதான். ஆனால், அதையும் தாண்டி நிறைய விஷயங்கள் உள்ளன. உதாரணமாக, விவசாயத்தை எடுத்துக்கொள்வோம். சிறு குறு விவசாயிகள், குத்தகை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் என்கிற வகையில்தான் மக்களவை உறுப்பினர்களின் பணிகள் அமைந்துள்ளது. எண்ணிக்கை அடிப்படையில் அல்ல. எண்ணிக்கைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடுதான் மாறுபடும். பயிர் சாகுபடிச் சிக்கல்களுக்கான தீர்வுகள் என நகர்ந்தால், நன்செய் புன்செய் நிலம்; அதில் விளையும் பயிர்கள்; அதனை ஒட்டிய செயல்பாடுகள், செயல்திட்டங்கள் ஆகியவை முக்கியமானவை. ஒருவேளை நகராட்சி, உள்ளாட்சி நிர்வாகம் எனில் மக்கள்தொகை மறுவரையறைக்குத் தேவை எழுகிறது. குடிநீர் விநியோகம், குப்பை மேலாண்மை, தெருவிளக்கு இப்படித் தொடங்கிப் பல பிரச்சினைகளுக்கு மக்கள்தொகை அளவு முக்கியம்.

மக்கள் பிரதிநிதிகள், நேருக்கு நேர் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் குடிமக்களைப் பார்த்தே தீர வேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பணிகள் மக்களின் தன்மை, தரத்தின் அடிப்படையில் அமைபவை. எனவே, மக்களவை எண்ணிக்கையில் மாற்றங்கள், மறுவரையறை தேவையில்லை. வளர்ச்சிக் குறியீடுகள் அடிப்படையில் மாநிலங்களவையில் சில மாற்றங்களைச் செய்யலாம்.

மக்கள்தொகையின் தன்மை, தரத்தின் அடிப்படையில் மாநிலங்களவை மறுவரையறையை அணுக வேண்டும். பொருளாதார வளர்ச்சி மக்கள் நலன் சார்ந்து பல வளர்ச்சிக் குறியீடுகள் உலகம் முழுவதும் பயன்பாட்டில் உள்ளன. இவற்றின் அடிப்படையில் மறுவரையறை அமையலாம். பொருளாதார வளர்ச்சி எனில், மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு, தனிநபர் வருமானம், எழுத்தறிவு விகிதம், பள்ளி – கல்லூரி சேர்க்கை விகிதம், பாலின எழுத்தறிவு விகிதம், மக்களின் சராசரி வாழ்நாள், பள்ளிகளில் குழந்தைகள் செலவிடும் காலம், பச்சிளம் குழந்தை மரண விகிதம், பேறுகால மரணம், நோய்த் தடுப்பு விகிதாச்சாரம், மருத்துவமனைகள் – மருத்துவ ஊழியர்கள் எண்ணிக்கை, சமூக வளர்ச்சித் திட்டங்கள் – அவற்றின் அமலாக்க விகிதம் போன்ற பல வளர்ச்சிக் குறியீடுகள் உள்ளன.

இத்தகைய வளர்ச்சிக் குறியீடுகளில் குறைந்தபட்சம் எவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என மத்திய – மாநில அரசுகள் இணைந்து ஒரு முடிவுக்கு வரலாம். மக்கள்தொகைக் கணக்கெடுப்பைப் போல் பத்தாண்டுகளுக்குக் காத்திருக்கத் தேவையில்லை. இந்த வளர்ச்சிக் குறியீட்டுப் புள்ளிவிவரங்கள் மத்திய – மாநில அரசுகளால் சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாக தொடர்ந்து சேகரிக்கப்படுபவைதான். இவையே போதுமானவை. சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, சமூகநலத் திட்டங்கள் என எந்தத் துறையில் ஒரு மாநிலம் சிறப்பாகச் செயல்படுகிறதோ அந்த மாநிலம், ஒரு மாநிலங்களவை உறுப்பினரை நியமிக்கலாம். அடுத்து வரும் காலங்களில் சிறப்பாகச் செயல்பட்ட மாநிலத்தின் அனுபவங்கள், பணிகள், உத்திகள் ஆகியவற்றை மத்திய அரசோடும் இதர மாநிலங்களோடும் பகிர்ந்துகொள்ளலாம்.

மாநிலங்கள், தங்கள் வளர்ச்சியின் வழியாகப் பெற்ற மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ஓர் அங்கீகாரமாக, கௌரவமாகக் கருதும். அதேவேளை, இதர மாநிலங்கள் அந்த மாநிலங்களவை உறுப்பினரைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதுபோன்ற மாநிலங்களவை இடங்களைப் பிடிக்க ஒவ்வொரு மாநிலமும் வளர்ச்சிப் போட்டியில் ஈடுபடும். அதேவேளை இது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பயன்படும். இதில் மிகச் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி வழங்கலாம். வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பில் கூடுதல் பங்களிப்பு செய்யுமாறு கோரிக்கைவிடுக்கலாம். இதைச் செய்து முடிக்க இன்னும் முப்பது ஆண்டுகள் தேவையில்லை. அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் எனத் திட்டமிட்டு ஒரு புதிய மறுவரையறையை நோக்கி நகர்ந்தால் அது ஒட்டுமொத்த நாட்டுக்கும் பலனளிக்கும்!

THE HINDU - TAMIL
Dated: 25.03.2025

இறந்தவர் பெயர் நீக்கப்படுவதுடன், ஒருவர் பெயர் 2 முறை இடம்பெற கூடாது

# சரியான வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும்

## தேர்தல் ஆணைய ஆலோசனை கூட்டத்தில் அரசியல் கட்சிகள் வலியுறுத்தல்




தேர்தல் ஆணையம் சார்பில் அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில், மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் திமுக, அதிமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். படம்: எஸ்.சத்தியசீலன்

**சென்னை**

வாக்காளர் பட்டியிலில் இறந்தவர் பெயரை நீக்குதல், ஒருவது பெயரே 2 முறை இடம் பெறுவது போன்ற தவறுகள் இல்லாமல், 100 சதவீதம் சரியான வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும் என தேர்தல் ஆணையம் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் அரசியல் கட்சிகள் தெரிவித்தன.

தமிழகத்தில் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று ஆலோசனை நடத்தினார்.

கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் கட்சிகளின் பிரதிநிதிகள் பல்வேறு கருத்துகளை தெரிவித்தனர்.

**ஆர்.எஸ்.பாரதி (திமுக):** பல ஆண்டுகளுக்கு முன்பு மறைந்தவர்களின் பெயர்கள் எல்லாம் தொடர்ந்து வாக்களர் பட்டியலில் இடம்பெற்று வருகிறது. அதே போல இடம் பெயர்ந்தவர்களின் பெயர்களும் ஒவ்வொரு தொகுதிக்கு குறைந்தபட்சம் 20 சதவீதமாவது இருக்கிறது. வாக்காளர் பட்டியலை சீரமைப்பதன் மூலம் தேர்தலின்போது வாக்காளரின் பெயர் இல்லாததால் ஏற்படும் குழப்பங்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் பெருமளவில் தவிர்க்கப்படும்.

**டி.ஜெயக்குமார் (அதிமுக):** வாக்காளர் பட்டியலில் பல குளறுபடிகள் தொடர்கின்றன. இறந்தவர்களின் பட்டியலை பெற்று, அதனை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். பூத் சிலிப் வீடுகளுக்கு சரியாக விநியோகிக்கப்படுவதில்லை.

**கரு.நாகராஜன் (பாஜக):** தேர்தலின்போது நகர்ப்புறங்களில் வாக்குசதவீதம் குறைகிறது. வார வேலை நாட்களில் வாக்குப்பதிவை வைக்க வைக்க வேண்டும். இறுதி வாக்காளர் பெயர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்பாக நீக்கப்பட்ட பெயர் பட்டியலையும் வெளியிட வேண்டும். வாக்காளர் பட்டியலில் 100 சதவீதம் பேர்களை சேர்க்க வேண்டும்.

**ஏ.பி.சூர்ய பிரகாசம் (காங்கிரஸ்):** தேர்தல் ஆணையத்தின் தகவல் தொகுப்புடன், பொது மக்களின் ஆதார் எண்ணை இணைத்தால், ஒருவர் 18 வயது ஆனவுடன் அவருக்கு தேர்தல் ஆணையம் தானாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க வேண்டும். அதேபோல், இறப்பு ஆவணங்களின் மூலம் பெயர்களை தானாகவே பட்டியலில் இருந்து நீக்க வேண்டும்.

**ந.பெரியசாமி (இந்திய கம்யூனிஸ்ட்):** வாக்காளர் பட்டியலை தவறுகள் இல்லாமல் வெளிப்படையாக தயாரிக்க வாக்காளர் பதிவு அதிகாரி அதிகாரம் கொண்டவராக நியமிக்க வேண்டும். வாக்காளர் பட்டியலில் செய்யப்படும் திருத்தங்களை ஊராட்சி மன்றங்கள், வாக்குச்சாவடி மையங்கள், மாநகர மன்ற அலுவலகங்களிலும் மக்களின் பார்வையில் வைக்க வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளோம்.

**பாலசிங்கம் (விசிக):** விவிபாட் இயந்திரத்தில் பதிவாகும் வாக்குச் சீட்டுகளை எண்ணிய பிறகுதான் தேர்தல் முடிவை அறிவிக்க வேண்டும். ஆணையமே வேட்பாளரின் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். மேலும் இக்கூட்டத்தில், தேமுதிக, ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

THE HINDU- TAMIL

Dated: 25.03.2025

# அடுக்குமாடி குடியிருப்புகளில் வாக்குச்சாவடி அமைக்க திட்டம்

சென்னை

சென்னையில் அடுக்குமாடி குடியிருப்புகளில் வாக்குச்சாவடிகள் அமைப்பது குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவது தொடர்பாக, சென்னை மாநகராட்சி சார்பில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம், ரிப்பன் மாளிகையில் நேற்று நடைபெற்றது. மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள், உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளிட்டவை அடிப்படையில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கான வலுவான மற்றும் வெளிப்படையான சட்ட கட்டமைப்பை நிறுவுவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் உள்ளிட்டவை தொடர்பாகவும், அடுக்குமாடி கட்டிட பகுதிகளில் புதிய வாக்குச்சாவடி மையங்கள் அமைத்தல் தொடர்பாகவும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் ம.பிரதிவிராஜ் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், எம்.பி. அமித், கட்டா ரவி தேஜா, மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) ரா.பானுகோபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

THE HINDU - TAMIL
Dated: 25.03.2025

மக்களவை தேர்தலுக்கு பிறகு

# 6 கட்சிகளின் கையிருப்பு ரூ.4,300 கோடி அதிகரிப்பு

**புதுடெல்லி**

கடந்த 2024 மக்களவைத் தேர்தலுக்கான செலவு அறிக்கையை தேர்தல் ஆணையத்திடம் அரசியல் கட்சிகள் சமர்ப்பித்துள்ளன. இந்த அறிக்கைகளை காமன் வெல்த் மனித உரிமைகளுக்கான நடவடிக்கை (சிஎச்ஆர்ஐ) என்ற அமைப்பு பகுப்பாய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதன்படி பாஜக, தெலுங்கு தேசம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், லோக் ஜனசக்தி (ராம் விலாஸ்), சிக்கிம் ஜனநாயக கட்சி (எஸ்டிஎப்), அகில இந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி (ஏஐயுடிஎப்) ஆகிய 6 கட்சிகளின் இருப்பு நிதி தேர்தலின் தொடக்கத்தில் இருந்ததைவிட தேர்தலுக்குப் பிறகு ரூ.4300 கோடி அதிகரித்துள்ளது.

மேலும் பாஜக, காங்கிரஸ், மார்க்சிஸ்ட், ஆம் ஆத்மி, பகுஜன் சமாஜ் ஆகிய 5 தேசிய கட்சிகள் மற்றும் திரிணமூல் காங்கிரஸ், திமுக, பிஆர்எஸ், தெலுங்கு தேசம், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ், சமாஜ்வாதி, ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட 17 பிராந்திய கட்கள் என 22 கட்சிகளின் மொத்த இருப்பு நிதி தேர்தலுக்கு பிறகு 31% அதிகரித்துள்ளது.

**பாஜக முதலிடம்**

இருப்பு நிதி உயர்வில் பாஜக முதலிடத்தில் உள்ளது. இக்கட்சியின் தொடக்க நிதி ரூ.5,921.8 கோடியாக இருந்தது. இக்கட்சி ரூ.6,268 கோடி திரட்டியது. ஆனால் ரூ.1,738 கோடி மட்டுமே செலவிட்டது. இதனால் இருப்பு நிதி ரூ.10,107.2 கோடியாக அதாவது ரூ.4,185 கோடி அதிகரித்துள்ளது.

இதுபோல் தெலுங்கு தேசம் ரூ.65.4 கோடி, மார்க்சிஸ்ட் ரூ.8 கோடி, லோக் ஜனசக்தி (ராம் விலாஸ்) ரூ.9.9 கோடி, எஸ்டிஎப் ரூ.76 லட்சம், ஏஐயுடிஎப் ரூ.3.6 லட்சம் என பிற கட்சிகளின் இருப்பு நிதியும் அதிகரித்துள்ளது. இந்த நிதி அதிகரிப்பில் முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி 9-வது இடத்தில் உள்ளது.

DAILY THANTHI
Dated: 25. 03. 2025

# வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் இருக்கக்கூடாது

## தேர்தல் ஆணைய கூட்டத்தில் அரசியல் கட்சியினர் வற்புறுத்தல்

சென்னை, மார்ச்.25-
வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் இருக்கக்கூடாது என்று தேர்தல் கமிஷன் சார்பில் நடந்த கூட்டத்தில் அரசியல் கட்சியினர் வற்புறுத்தியுள்ளனர்.

### ஆலோசனை கூட்டம்

தலைமை தேர்தல் கமிஷனராக ஞானேஷ்குமார் கடந்த மாதம் பதவியேற்றார். அதனை தொடர்ந்து, அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கான ஆலோசனை கூட்டம் டெல்லியில் நடந்தது.

இந்த கூட்டத்தில், மாநிலங்களில் உள்ள அரசியல் கட்சிகளிடம் தேர்தல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து தேர்தல் விதிகளின் அடிப்படையில் அவற்றை தீர்த்து வைக்க வேண்டும் என்று அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதுகுறித்த விவரங்களை வருகிற 31-ந்தேதிக்குள் தேர்தல் கமிஷனுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டு இருந்தது.

### 12 கட்சிகளுக்கு அழைப்பு

இதையடுத்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் அனைத்துக்கட்சி கூட்டம் நேற்று மாலை 3 மணிக்கு சென்னை தலைமை செயலகத்தில் நடந்தது. கூடுதல் முதன்மை தேர்தல் அதிகாரிகள் ஸ்ரீதர், ஆனிஜோசப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகள் என 12 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. சமீபத்தில் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி, நாம் தமிழர் கட்சி பிரதிநிதிகளும் கூட்டத்தில் முதன் முறையாக பங்கேற்றனர்.

அதன்படி, ஆர்.எஸ்.பாரதி, தாயகம் கவி (தி.மு.க.), ஜெயக்குமார், இன்பதுரை (அ.தி.மு.க.), சூரியபிரகாசம், நவாஸ் (காங்கிரஸ்), கருநாகராஜன், கராத்தே தியாகராஜன் (பா.ஜ.க.), குணசேகரன், ஆறுமுகநயினார் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு), பெரியசாமி, வீரபாண்டியன் (இந்திய கம்யூனிஸ்டு), பார்த்தசாரதி, ஜனார்தன் (தே.மு.தி.க.), பாலசிங்கம், குணவலகன் (வி.சி.க.), பாக்யராஜ், செந்தில்குமார் (நாம் தமிழர் கட்சி), ஜோசப் ராஜா, ஸ்டெல்லாமேரி (ஆம் ஆத்மி), சீனிவாசன், ரமேஷ் (தேசிய மக்கள் கட்சி), ஆனந்தன், ஜெய்சங்கர் (பகுஜன் சமாஜ் கட்சி) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தேர்தல் விதிகள்

இந்த கூட்டத்தில், 18 வயது எட்டியவரை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது, ஒரே நபர் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பது, இறந்தவர்கள் பெயர்களை நீக்காமல் இருப்பது உள்ளிட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகள், வாக்குச்சாவடிகள் அமைவிடம் தொடர்பான ஆட்சேபனைகள், தேர்தல் நடத்தை விதிகளை முறையாக அமல்படுத்துவது உள்ளிட்டவை குறித்து அரசியல் கட்சியினர் எடுத்து கூறினர்.

வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை களைய வேண்டும் என்பதை அனைவரும் வற்புறுத்தினர்.

### குளறுபடி இல்லாத பட்டியல்

கூட்டத்திற்கு பிறகு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நிருபர்களிடம் கூறுகையில், எந்த வித குளறுபடியும் இல்லாத வாக்காளர் பட்டியல் தேவை என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். வாக்காளர் பட்டியலில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி உள்ளோம். இறந்துபோனவர்கள் பெயர் பட்டியலில் இருக்கும் போது பிரச்சினை வருகிறது. அதை சரி செய்ய கோரிக்கை வைத்துள்ளோம் என்றார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் டி.ஜெயகுமார் கூறுகையில், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் நடக்கவேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் இருந்து இறந்தவர் பட்டியல்களை வாங்கி, வாக்காளர் பட்டியலில் உள்ள இறந்தவர்களின் பெயர்களை நீக்க வேண்டும். வாக்கு சாவடி மையங்களில், தொகுதி-4 எழுதிய அரசு பணியாளர்களை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். வாக்காளர் அடையாள அட்டை யுடன் ஆதாரை இணைக்க வேண்டும் என்றார்.

### 100 சதவீத வாக்குப்பதிவு

பா.ஜனதா மாநிலதுணைத் தலைவர் கரு.நாகராஜன் கூறுகையில், தேர்தல் ஆணையம் 100 சதவீதம் வாக்கு பதிவு மேற்கொள்ள முயற்சி செய்கிறது என்றாலும், அதற்கான பலன் நம்மிடம் கிடைக்கவில்லை. நகர்ப்புறங்களில் தான் மிகக் குறைந்த அளவில் வாக்குப்பதிவு நடக்கிறது. விடுமுறை நாட்களில் தேர்தல் வாக்கு பதிவு வைக்க கூடாது அதை மத்தியில் உள்ள தேர்தல் ஆணையத்திடம் எடுத்து கூற அறிவுறுத்தி உள்ளோம். உள்ளாட்சி, சட்டசபை, நாடாளுமன்ற தேர்தல்கள் அனைத்திற்கும் ஒரே வாக்குச்சாவடியை பயன்படுத்த வேண்டும் என்றார். அவருடன் மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன் இருந்தார்.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த வக்கீல் சூரியபிரகாசம் கூறுகையில், தேர்தல் கமிஷன் செயல்பாடுகள் நம்பிக்கை இழந்துள்ளது. மக்கள் மனதில் நம்பிக்கை பெறும் வகையில் தேர்தல் கமிஷன் செயல்பாடுகளை திருத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

DAILY THANTHI
Dated: 25.03.2025

### தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவது குறித்து

# அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனை

## மாநகராட்சி ரிப்பன் கட்டிட அலுவலகத்தில் நடந்தது

சென்னை, மார்ச்.25-

இந்திய தேர்தல் கமிஷனின் உத்தரவின்படி, தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக்கூட்டம் சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட அலுவலக கூட்டரங்கில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி கமிஷனருமான ஜெ.குமரகுருபரன் தலைமை தாங்கினார்.


அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தரப்பில் இருந்து தி.மு.க. சார்பில் மாநில சட்டத்துறை துணை செயலாளர் சந்துரு, அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் பாலகங்கா, பா.ஜனதா கட்சியின் மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன், தமிழக காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் நவாஸ், தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் மாறன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வடசென்னை மேற்கு மாவட்ட செயலாளர் உஷா ராணி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் கருணாநிதி, பகுஜன் சமாஜ் கட்சி மாநில ஒருங்கிணைப்பாளர் அடைக்கல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டது. இவை தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது.

கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் பிரித்விராஜ், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் பிரவீன்குமார், அமித், கட்டா ரவி தேஜா, மாவட்ட வருவாய் அலுவலர் பானுகோபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

DINAMALAR
Dated: 25.03.2025

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க 'செயலி' தேர்தல் கமிஷன் உருவாக்க கட்சிகள் வலியுறுத்தல்



தேர்தல் நடைமுறையை வலுப்படுத்துவது தொடர்பாக, அரசியல் கட்சிகளின் ஆலோசனை கூட்டம், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில், தலைமை செயலகத்தில் நேற்று நடந்தது.

**சென்னை, மார்ச் 25–**

'தவறுகள் இல்லாத வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டும்' என, தேர்தல் கமிஷன் நடத்திய கூட்டத்தில் பங்கேற்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

தேர்தல் நடைமுறையை வலுப்படுத்துவது தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் ஆலோசனை கூட்டம், சென்னை தலைமை செயலகத்தில் நேற்று நடந்தது.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமை வகித்தார். கூட்டத்தில், தி.மு.க., – அ.தி.மு.க., – பா.ஜ., – காங்., – வி.சி., உள்ளிட்ட 12 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

கூட்டம் முடிந்த பின், அவர்கள் அளித்த பேட்டி:

**தி.மு.க., அமைப்பு செயலர் ஆர்.எஸ்.பாரதி:** தவறு இல்லாத வாக்காளர் பட்டியல் தயாரிக்க, தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். தேர்தலின் போது, கூட்டம் நடத்த, விளம்பரம் செய்ய அனுமதி பெற குழு அமைக்கப்படுகிறது.

அந்த குழுவில் விண்ணப்பித்தால், அனுமதிக்கு ஒரு வாரத்திற்கு மேலாகிறது. அனுமதியை, 24 மணி நேரத்திற்குள் வழங்க வேண்டும்.

**அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் ஜெயகுமார்:** அனைத்து தேர்தல்களிலும், ஒருவர் ஒரே இடத்தில் ஓட்டுப்பதிவு செய்வதை உறுதி செய்ய வேண்டும். தற்போது, தொழில்நுட்பம் வளர்ந்து உள்ளது.

இதை பயன்படுத்தி, போலி வாக்காளர்களை கண்டறிந்து நீக்க வேண்டும். தேர்தல் நியாயமாக, சுதந்திரமாக நடக்க வேண்டும். ஆளுங்கட்சி அதிகார துஷ்பிரயோகம் செய்வதை தடுக்க வேண்டும்.

ராதாபுரம் தொகுதியில், ஒரே நபரின் பெயர், வாக்காளர் பட்டியலில் மூன்று இடங்களில் உள்ளது. இப்படி இருந்தால் எப்படி தேர்தல் நேர்மையாக நடக்கும்? தவறு செய்யும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தமிழக பா.ஜ., துணை தலைவர் கரு.நாகராஜன்:** நகர்ப்புறங்களில் ஓட்டு சதவீதம் மிகவும் குறைவாக உள்ளது. தொடர் விடுமுறை நாட்களில், ஓட்டுப்பதிவு வைப்பதை தவிர்க்க வேண்டும். ஒரே ஓட்டுச்சாவடி அனைத்து தேர்தலுக்கும் அவசியம்.

ஒவ்வொரு தேர்தலுக்கும் ஓட்டுச்சாவடி மாறுவது தவிர்க்கப்பட வேண்டும். குடும்ப உறுப்பினர்களுக்கே, வெவ்வேறு ஓட்டுச்சாவடி வருகிறது. இது போன்ற குறைகளை களைய வேண்டும்.

**தேர்தல் காலங்களில் பணம் வினியோகம் தடுக்க, சிறப்பு புலனாய்வு குழுவை நியமிக்க வேண்டும்**

**வி.சி., தலைமை நிலைய செயலர் பாலசிங்கம்:** வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்யும் போது, அதற்கான காரணத்தை தெரியப்படுத்த வேண்டும். ஒருவருக்கு ஒரு வாக்காளர் அடையாள அட்டை இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**தமிழக காங்., வழக்கறிஞர் சூர்யபிரகாசம்:** பொதுமக்களின் ஆதார் எண்ணை, வாக்காளர் பட்டியலுடன் இணைக்க, பிரத்யேக செயலியை தேர்தல் கமிஷன் வடிவமைக்க வேண்டும்.

அந்த செயலி ஒருவருக்கு, 18 வயது பூர்த்தியானால், தானியங்கி முறையில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம், பிறப்பு, இறப்பு பதிவேட்டின் அடிப்படையில், தானியங்கி முறையில் நடைபெற வேண்டும்.

தேர்தல் காலங்களில், பணம் வினியோகத்தை தடுக்கும் வகையில், சிறப்பு புலனாய்வு குழுவினரை தேர்தல் ஆணையம் நியமிக்க வேண்டும்.

**இந்திய கம்யூனிஸ்ட் மாநில துணை செயலர் பெரியசாமி:** ஓட்டுச்சாவடி முகவர்களும், அலுவலர்களும், தினமும் வாக்காளர் பட்டியலில் செய்யும் திருத்தங்களை, பொதுமக்கள் அறியும் வகையில், உள்ளாட்சி அலுவலகங்களிலும், ஓட்டுச்சாவடி முகப்பிலும், பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும்.

**ஆம் ஆத்மி கட்சி மாநில பொதுச்செயலர் ஜோசப் ராஜா:** பெருநகரங்களில் பதிவாகும் ஓட்டுகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. தேர்தல் கமிஷன் மூன்று முறைக்கு மேல், ஓட்டு போடாதவர்களை கண்டறிந்து, அவர்களை ஓட்டு போட வைக்க வேண்டும். வார இறுதி நாளில் தேர்தல் இருக்கக் கூடாது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

DINAMANI
Dated: 25.03.2025

# பிழையில்லாத வாக்காளர் பட்டியலை உறுதி செய்ய வேண்டும்

## தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் கட்சிகள் வலியுறுத்தல்



தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவது தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை ஆலோசனை நடத்திய தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக். உடன் கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஆனி ஜோசப், வி.ஸ்ரீதர்.

சென்னை, மார்ச் 24: பிழையில்லாத வாக்காளர் பட்டியலைத் தயாரித்து தேர்தலுக்கு முன்பாக வெளியிட வேண்டும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் வலியுறுத்தின.

தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், தமிழகத்திலும், தேசிய அளவிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். குறிப்பாக திமுக, அதிமுக, காங்கிரஸ், பாஜக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், தேமுதிக, பகுஜன் சமாஜ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகளுடன், முதல் முறையாக நாம் தமிழர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளும் பங்கேற்றன.

கூட்டத்துக்குப் பிறகு, செய்தியாளர்களுக்கு கட்சிகளின் பிரதிநிதிகள் தனித்தனியே அளித்த பேட்டி:

**திமுக அமைப்புச் செயலர் ஆர். எஸ்.பாரதி, துணை அமைப்புச் செயலர் தாயகம் கவி:** வாக்காளர் பட்டியல் தூய்மையானதாக இருக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம், வாக்குப் பதிவின் போது சட்டம்-ஒழுங்கு பிரச்னை ஏற்படாது. தேர்தல் காலத்தில் தொலைக்காட்சி, ஊடகங்களில் விளம்பரம் கொடுக்க முன் அனுமதி பெற வேண்டியுள்ளது. இதற்கான குழுவினர் அனுமதி அளிக்க ஒருவாரம் வரை அவகாசம் எடுத்துக் கொள்கின்றனர். ஒரே நாளில் அனுமதி தர வேண்டும்.

**அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார், சட்டப் பிரிவுச் செயலர் இன்பதுரை:** தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்த வேண்டும். வாக்காளர் பட்டியலே தேர்தலுக்கான அடிப்படையான அம்சமாகும். கடந்த காலங்களில் பல குளறுபடிகள் இருந்தன. இறந்தவர்களின் பட்டியலை உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து தேர்தல் ஆணையமே தானாகவே நீக்க வேண்டும். வாக்குச் சாவடி அலுவலர்களாக குரூப் 4 நிலையிலான அலுவலர்களை நியமிக்க வேண்டும்.

**பாஜக மாநில துணைத் தலைவர் கருநாகராஜன், மாநிலச் செயலர் கராத்தே தியாகராஜன்:** பிரதான வாக்காளர் பட்டியல் ஜனவரியில் வெளியிடப்படுகிறது. இந்தப் பட்டியல் அரசியல் கட்சிகளுக்கு தரப்படுகிறது. மார்ச்சில் வெளியிடப்படும் துணை வாக்காளர் பட்டியல் யாருக்கும் தரப்படுவதில்லை. அதேசமயம், வாக்குச் சாவடிகளில் உள்ள தேர்தல் அலுவலர்களிடம் வேறொரு வாக்குச் சாவடி தரப்படுகிறது. அந்தப் பட்டியலின் அடிப்படையிலேயே தேர்தல் நடத்தப்படும்.

இதுபோன்ற பிரச்னைகள் இருக்கக் கூடாது எனத் தெரிவித்தோம். வீடுகள் மாறுவோர் முகவரி திருத்தத்தை வாக்காளர் பட்டியலில் செய்ய வேண்டும். குடும்ப அட்டைகளில் செய்யப்படும் திருத்தத்தில் மேற்கொள்ளும் கவனத்தை, வாக்காளர் பட்டியலில் செலுத்துவதில்லை.

**காங்கிரஸ் கட்சி பிரதிநிதி ஏ.பி. சூர்யபிரகாசம்:** ஆதார் அட்டையுடன் தேர்தல் ஆணைய வாக்காளர் பட்டியலை இணைக்க வேண்டும். 18 வயது பூர்த்தியானவுடன் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை தானாகவே பட்டியலில் சேர்க்கும் வழியை ஆராய வேண்டும். வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு, நீக்கம் போன்ற பணிகளை தேர்தல் ஆணையம் தானாகவே மேற்கொள்ள வேண்டும். வாக்குப் பதிவின் போது, அதிகாரம், பண பலத்தைத் தடுக்க வேண்டும்.

**விசிக தலைமை நிலையச் செயலர் பாலசிங்கம், தேர்தல் பணிக் குழு மாநில பொறுப்பாளர் குணவழகன்:** தேர்தலுக்கு முன்பாக, வாக்காளர் பட்டியலை சரியான முறையில் திருத்தி வெளியிட வேண்டும். தேர்தல் வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையாகவும் நடைபெற வழி செய்ய வேண்டும்.

**இந்திய கம்யூனிஸ்ட் மாநில துணைச் செயலர் ந.பெரியசாமி:** வாக்காளர் பட்டியலை தவறுகள் இல்லாமல் வெளிப்படையாகத் தயாரிக்க வேண்டும். வாக்காளர் பட்டியலில் செய்யப்படும் திருத்தங்களை ஊராட்சி மன்றங்கள், வாக்குச் சாவடி மையங்கள், மாமன்ற அலுவலகங்களில் மக்களின் பார்வையில் படும்படி வைக்க வேண்டும்.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயற்குழு உறுப்பினர் என்.குணசேகரன், மாநிலக் குழு உறுப்பினர் ஆறுமுக நயினார்:** வாக்காளர் பட்டியலை நூறு சதவீதம் பிழையில்லாமல், எந்த வாக்காளரும் விடுபட்டு விடாமல் தயாரிக்க வேண்டும்.

வாக்காளர் அடையாள அட்டைகள் மீது குற்றச்சாட்டுகளைப் போக்கி, வாக்களிப்பதற்கான விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டும். இதேபோன்ற கோரிக்கைகளை ஆம் ஆத்மி, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளும் முன்வைத்தனர்.

DINAMANI
Dated: 25.03.2025

# அடுக்குமாடி கட்டடப் பகுதியில் புதிய வாக்குச்சாவடி மையம்

## கட்சிகளுடன் மாவட்ட தேர்தல் அலுவலர் ஆலோசனை

**சென்னை, மார்ச் 24:** அடுக்குமாடி கட்டடப் பகுதிகளில் புதிய வாக்குச்சாவடி மையங்கள் அமைத்தல் தொடர்பாக, அரசியல் கட்சிகளுடன் மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ.குமரகுருபரன் ஆலோசனை நடத்தினார்.

தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவது தொடர்பாக கட்சிப் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம், சென்னை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஜெ.குமரகுருபரன் தலைமையில் ரிப்பன் மாளிகையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950 மற்றும் 1951, வாக்காளர் பதிவு விதிகள் 1960, தேர்தல் நடத்துதல் விதிகள் 1961, உச்சநீதிமன்ற தீர்ப்புகள், இந்திய தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கான வலுவான மற்றும் வெளிப்படையான சட்ட கட்டமைப்பை நிறுவுவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் உள்ளிட்டவை தொடர்பாகவும், அடுக்குமாடி கட்டடப் பகுதிகளில் புதிய வாக்குச்சாவடி மையங்கள் அமைத்தல் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

DINAKARAN Dated: 25.03.2025

### குளறுபடிகள் இல்லாமல் தேர்தல் நடைபெற

# வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் கார்டை 100% இணைக்க வேண்டும்

## தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தலைமையில் நடந்த கூட்டத்தில் அனைத்துக்கட்சி தலைவர்கள் வலியுறுத்தல்

சென்னை, மார்ச். 25: தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவது குறித்து சென்னையில் நேற்று அனைத்துக்கட்சி கூட்டம் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், குளறுபடிகள் இல்லாமல் தேர்தல் நடைபெற ஆதார் கார்டை வாக்காளர் அடையாள அட்டையுடன் 100 சதவீதம் இணைக்கவேண்டும் என்று அனைத்துக்கட்சி தலைவர்களும் வலியுறுத்தினர்.

புதிய இந்திய தலைமை தேர்தல் கமிஷனராக ஞானேஷ்குமார் பதவியேற்றார். அவர், தலைமை தேர்தல் கமிஷனராக பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளையும் அழைத்து டெல்லியில் ஆலோசனை கூட்டத்தை நடத்தினார். அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தொடர்ந்து ஆலோசனை கூட்டம் நடத்தி, ஆலோசனைகளை பெற்று, சட்ட விதிகளுக்கு உட்பட்டு தீர்வு காண வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதையொட்டி, தேர்தல் நடைமுறையை வலுப்படுத்துவது மற்றும் குறைகளை கேட்டறிவது தொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் அனைத்துக்கட்சி கூட்டம் நேற்று மாலை 3 மணிக்கு சென்னை தலைமை செயலகத்தில் உள்ள பிரதான கட்டிடத்தின் 2வது தளத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்றது. கூடுதல் முதன்மை தேர்தல் அதிகாரிகள் ஸ்ரீதர், ஆனிஜோசப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பங்கேற்க அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகள் என 12 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

விடுதலை சிறுத்தைகள் கட்சி, நாம் தமிழர் கட்சி பிரதிகளும் கூட்டத்தில் பங்கேற்றனர். அதன்படி, ஆர்.எஸ்.பாரதி, தாயகம் கவி (திமுக), ஜெயக்குமார், இன்பதுரை (அதிமுக), சூரியபிரகாசம், நவாஸ் (காங்கிரஸ்), கரு.நாகராஜன், கராத்தே தியாகராஜன் (பாஜ), குணசேகரன், ஆறுமுகநயினார் (மார்க்சிஸ்ட்.), பெரியசாமி வீரபாண்டி (இந்திய கம்யூனிஸ்ட்), பார்த்தசாரதி, ஜனார்தன் (தேமுதிக), பாலசிங்கம், குணவழகன் (விசிக), பாக்யராஜ், செந்தில்குமார் (நாம் தமிழர் கட்சி), ஜோசப்ராஜா, ஸ்டெல்லா மேரி (ஆம் ஆத்மி), சீனிவாசன், ரமேஷ் (தேசிய மக்கள் கட்சி), ஆனந்தன், ஜெய்சங்கர் (பகுஜன் சமாஜ் கட்சி) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் திமுக, அதிமுக, பாஜக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட 10க்கு மேற்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக அறிவிக்கப்பட்டுள்ள நாதக, விசிக ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் முதல்முறையாக இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில், 18 வயது எட்டியோரை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது, ஒரே நபர் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பது, இறந்தவர்கள் பெயர்களை நீக்காமல் இருப்பது உள்ளிட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகள், வாக்குச்சாவடிகள் அமைவிடம் தொடர்பான ஆட்சேபணைகள், தேர்தல் நடத்தை விதிகளை முறையாக அமல்படுத்துவது உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த கூட்டம் சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது.

மாநில தலைமை தேர்தல் அதிகாரி தலைமையிலான ஆலோசனை கூட்டம் முடிந்த பிறகு ஆர்.எஸ். பாரதி (திமுக) நிருபர்களிடம் கூறியதாவது:

எந்தவித குளறுபடியும் இல்லாத வாக்காளர் பட்டியல் தேவை என்று திமுக தொடர்ந்து வலிறுத்தி வருகிறது. அதேபோல், வாக்காளர் பட்டியலில் உள்ள குறைபாடுகளை பலமுறை நடந்த கூட்டங்களில் சுட்டிக்காட்டி உள்ளோம், அவை மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அப்போதுதான் நியாயமான முறையில் வாக்குபதிவு நடக்கும். இறந்துபோனவர்கள் பெயர் பட்டியலில் இருக்கும் பொழுது பிரச்னை வருகிறது. சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படுகிறது. அதை. சரி செய்ய கோரிக்கை வைத்துள்ளோம். அதேபோல சமூக ஊடகங்கள், ஊடகங்களில் விளம்பரம் கொடுப்பதற்கான குழுக்கள் தேர்தல் ஆணையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் விண்ணப்பிக்கும்போது கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த காலதாமதம் இல்லாமல் விரைந்து அதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டும் எனவும் இந்த ஆலோசனை கூட்டத்தில் கோரிக்கை வைத்துள்ளோம். அனைவரது ஆதார் கார்ட்டையும் வாக்காளர் அடையாள அட்டையும் இணைக்க வேண்டும்.

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் (அதிமுக): ஜனநாயகத்தில் தேர்தல் சுதந்திரமாக நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் ஒவ்வொரு முறையும், வாக்காளர் பட்டியல் என்பது அடிப்படை விஷயம். பட்டியலில் பெயர் இருந்தால் ஜனநாயக கடமை ஆற்ற முடியும். கடந்த தேர்தல்களில், அவ்வப்போது இதை சுட்டிக்காட்டினோம், பல குளறுபடிகள், பெயர் மாறி இருக்கும், இறந்தவர்கள் ஓட்டு போடும் நிலை உள்ளது. இறந்தவர்கள் பட்டியலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வாங்கி, அதை வாங்கி முதலில் நீக்க வேண்டும். இறந்தவர்கள் இன்னும் பட்டியலில் உள்ளது. எழுத படிக்க தெரியாதவர்கள்ள தேர்தல் ஆணையம் பிஎல்ஓ-வாக நியமிக்கிறார்கள். டேபிள் போட்டு உட்காரும் இடத்திலும் பூத் சிலிப் ஒழுங்காக வழங்கப்படுவது இல்லை. ஒவ்வொரு வீட்டுக்கும் பூத் சிலிப் கொடுத்தால் அவர்கள் தேர்தலில் எளிதாக வாக்களிக்க முடியும். தேர்தல் காலத்தில் விதிமுறைகளை காற்றில் பறக்கவிடப்படுகிறது. யார் தவறு செய்தாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளோம். கடந்த தேர்தலில் மிகப்பெரிய மோசடியாக, கடந்த முறை தேர்தலில் வாக்களித்தவர்கள் பெயர் இந்த முறை வாக்களிக்க முடியவில்லை. வெளியில் ஒரு பட்டியல், உள்ள ஒரு பட்டியல் வைக்கப்படுகிறது. எப்படி வாக்காளர் பெயர் நீக்கப்பட்டது. 4 கோடி மேற்பட்டவர்கள் மட்டுமே ஆதார் கார்டை லிங்க் செய்துள்ளார்கள். மீதமுள்ள 2 கோடி பேர் ஆதார் கார்டை வாக்காளர் அடையாள அட்டையும் இணைக்க வேண்டும். 2026ம் ஆண்டு நடைபெறும் தேர்தலில் 100 சதவீதம் குளறுபடி இல்லாமல் நடத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் வலியுறுத்தியுள்ளோம். இவ்வாறு கூறினர்.

DINAKARAN
Dated: 25.03.2025

# அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனை



அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனை கூட்டம், மாவட்ட தேர்தல் அலுவலர் குமரகுருபரன் தலைமையில் நடந்தது. அருகில், அதிகாரிகள்.

**ஆணையர் குமரகுருபரன் தலைமையில் நடந்தது**

சென்னை, மார்ச் 25: இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவது தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான குமரகுருபரன் தலைமையில் நேற்று ரிப்பன் கட்டிட அலுவலகக் கூட்டரங்கில் நடந்தது.

இதில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950 மற்றும் 1951, வாக்காளர் பதிவு விதிகள் 1960, தேர்தல் நடத்துதல் விதிகள் 1961, உச்சநீதிமன்ற தீர்ப்புகள், இந்திய தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கான வலுவான மற்றும் வெளிப்படையான சட்ட கட்டமைப்பை நிறுவுவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கூட்டத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் உள்ளிட்டவை தொடர்பாகவும், அடுக்குமாடி கட்டிட பகுதிகளில் புதிய வாக்குச் சாவடி மையங்கள் அமைத்தல் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலரும், துணை ஆணையருமான பிரதிவிராஜ், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வட்டார துணை ஆணையகள் பிரவீன் குமார், அமித், கட்டா ரவி தேஜா, மாவட்ட வருவாய் அலுவலர் பானுகோபன், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

செவ்வாய்க்கிழமை 25–3–2025
குரோதி பங்குனி 11 ஹிஜ்ரி 1446 ரம்ஜான் 24

# தெளிவுபடுத்த வேண்டும்

தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னையில நடத்திய தென்மாநில கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் முதல்கட்ட வெற்றியைப் பெற்றிருக்கிறதா இல்லையா என்பதைத் தாண்டி ஆக்கபூர்வமான விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இப்போதைய மக்கள்தொகை அடிப்படையில் மக்களவைத் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்தால், மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் வெற்றியடைந்த தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா ஆகிய தென்மாநிலங்களிலும், பஞ்சாப், ஹரியாணா, ஒடிஸா ஆகிய மாநிலங்களிலும் தொகுதிகள் எண்ணிக்கை குறைந்து, மக்களவையில் இந்த மாநிலங்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் என்பதுதான் இந்தக் கூட்டுக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பிரதான கருப்பொருள்.

முதல்வர் ஸ்டாலின் அழைப்பையேற்று கேரள, தெலங்கானா, பஞ்சாப் முதல்வர்கள், கர்நாடகத்தின் சார்பில் துணை முதல்வர், பிற மாநிலங்களிலிருந்து கட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில், 'மாநில அரசுகள், அரசியல் கட்சிகளை ஆலோசித்து அவர்கள் வழங்கும் கருத்துகளின் அடிப்படையில்தான் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 1971 மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான மக்களவைத் தொகுதிகளின் மறுசீரமைப்பு ஒத்திவைப்பு மேலும் 25 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டும்' என்கிற முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 82-இன்படி மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பிறகுதான் மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். கொவைட்–19 நோய்த்தொற்று பாவலால் ஒத்திவைக்கப்பட்ட 2021–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பையே மத்திய அரசு இன்னும் நடத்தாத நிலையில், தொகுதி மறுசீரமைப்பால் தென்மாநிலங்கள் பாதிக்கப்படும் என்கிற ஊகங்களின் அடிப்படையில் திமுக இப்படி ஒரு முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டுமா என்கிற விமர்சனங்களும் எழுந்துள்ளன. அரசு மீதான மக்களின் அதிருப்தியை மறைக்க திமுக ஆடும் நாடகம் இது என அதிமுகவும், பாஜகவும் விமர்சனத்தை முன்வைத்துள்ளன.

நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா நிறைவேற்றப்பட்டபோது, தொகுதி மறுசீரமைப்புக்குப் பிறகுதான் அது நடைமுறைக்கு வரும் என்று மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. அண்மையில் கோவைக்கு வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தமிழகம் பாதிக்கப்படாமல் விகிதாசாரத்தின் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்படும் எனக் கூறினார். இந்த இரண்டையும் மேற்கோள்காட்டும் திமுக, இதன் மூலம் தொகுதி மறுசீரமைப்பை மேற்கொள்ள மத்திய பாஜக அரசு திட்டமிட்டு வருவது உறுதியாவதாகக் கூறுகிறது.

'தொகுதி மறுசீரமைப்புக்கு தாங்கள் எதிரி அல்ல' எனக் கூறும் முதல்வர் ஸ்டாலின், நியாயமான தொகுதி மறுசீரமைப்பையே வலியுறுத்துவதாகவும் கூறியிருக்கிறார். இப்போதைய மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543–இல் இருந்து ஒட்டுமொத்தமாக 848–ஆக உயர்த்தி, அதை 1971–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி வரையறை செய்தால் தென்மாநிலங்களுக்கு பிரதிநிதித்துவம் குறையாமல் இருக்கும் என்பது திமுகவின் வாதம்.

இந்த முறையில் தொகுதி மறுசீரமைப்பை மேற்கொள்ளாத நிலையில் தொகுதி மறுசீரமைப்பை 25 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானம் வலியுறுத்துகிறது. கடைசியாக 1971–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 1973–ஆம் ஆண்டு மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 522 தொகுதிகள் என்பது 543–ஆக அதிகரிக்கப்பட்டு இப்போது வரை தொடர்கிறது.

ஒவ்வொரு தேர்தலிலும் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2019 மக்களவைத் தேர்தலில் இந்தியாவின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 91.19 கோடி. இந்த எண்ணிக்கை 2024 மக்களவைத் தேர்தலில் 97.97 கோடியாக, அதாவது 7.43 சதவீதம் அதிகரித்தது. அதிகரிக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அதிகரிக்கப்படுவதுதான் நியாயம். அப்போதுதான் வாக்காளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக இருக்கும்.

அதேவேளையில் மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்தால், தென்மாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கை குறைந்து, உத்தர பிரதேசம், ராஜஸ்தான், பிகார், மத்திய பிரதேசம் போன்ற வடமாநிலங்களுக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்கிற திமுகவின் கவலையையும் புறந்தள்ளிவிட முடியாது.

தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் தெற்கிலிருந்து எழுந்துள்ள சந்தேகங்களுக்கு தெளிவான பதிலைச் சொல்ல வேண்டிய கடமை மத்திய அரசுக்கு இருக்கிறது. தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படாது எனப் பொதுவான பதிலாக அல்லாமல், மக்கள்தொகை எண்ணிக்கையை குறைத்து, நாட்டின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய மாநிலங்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் அந்தப் பதில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், தொகுதி மறுசீரமைப்புக்கு என ஒரு புதிய வரைமுறையை உருவாக்க வேண்டும்.